




ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








செவ்வாய் ❖ செப்டம்பர். 12, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 340 ❖ ரூ.10


### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கு 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள்

# முதல்வர் தகவல்

## 1.06 கோடி பேர் தகுதி: மற்றவர்களது கோரிக்கைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதை குறுஞ்செய்தி அனுப்பி சொல்லியாக வேண்டும்: மு.க.ஸ்டாலின்

சென்னை, செப். 12–

"மகளிர் உரிமைத் திட்டத்தில் இணைந்துகொள்ள 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. தகுதியுள்ளவர்கள் என நாம் தேர்ந்தெடுத்துள்ளது 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம்பேர். அப்படியானால் மற்றவர்களது கோரிக்கைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதை நாம் அவர்களுக்குச் சொல்லியாக வேண்டும்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாகதமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர் பயன்பெறும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், முதல்வர் முகாம் அலுவலகத்திலிருந்து நேற்று காணொலிக்காட்சி வாயிலாககலந்துகொண்டு ஆய்வு மேற்கொண்டார்.



பின்னர் இந்தக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசியது: "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் தொடக்க விழாவானது வருகிற 15-ஆம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற இருக்கிறது. அன்றைய தினமே அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் அமைச்சர்கள் முன்னிலையிலும் நடைபெற இருக்கிறது.

தமிழக அரசின் மிகப்பெரிய திட்டம் என்றால் இதுதான். ஒரே நேரத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள், ஆயிரம் ரூபாயை மாதாமாதம், ஆண்டு தோறும் பெறப் போகிறார்கள். அதிகப்படியான நிதி ஒதுக்கீடு தேவைப்படும் திட்டமாகவும், அதிகப்படியான பயனாளிகள் உள்ளடக்கிய திட்டமாகவும் இது அமைந்துள்ளது. இதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டும் பொறுப்பும் கடமையும் அதிகாரிகளுக்கு இருக்கிறது.

ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் பயன்பெறுகிறார்கள் என்பதால் கிடைக்கின்ற பாராட்டு, ஒரு கோடி பாராட்டுகளுக்கு சமம். அதேபோல்தான் சிறு தவறு நடந்துவிட்டால் அதனால் கிடைக்கும் கெட்டபெயரும், என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. எனவே, எந்த இடத்திலும், எந்தச் சூழலிலும், எந்த ஒரு தனிநபருக்கும் சிறு தவறு கூட நடந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லி வருவதை, தற்போதும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தகுதி வாய்ந்த பெண்களுக்கு உரிமைத் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் வரும் செப்டம்பர் 15 முதல் கிடைக்கும் வகையில் நாம் ஏற்பாடு செய்துள்ளோம். இத்தகைய தகுதி பெற்ற குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதம் தோறும் வங்கிகளில் அவர்களது கணக்கில் உரிமைத் தொகை வரவு வைக்கப்படும். ஏடிஎம் கார்டுகள் முதற்கட்டமாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலும், படிப்படியாக விரைவில் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். ஆனால், ஏடிஎம் கார்டு வழங்கப்படுவதற்காக காத்திருக்காமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரிமைத் தொகை வழங்கப்படும். பயனாளிகளுக்கு பணத்தை எடுப்பதில் எந்த சிக்கலும் ஏற்படக் கூடாது, அதிலும் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோல், வரும் 15-ம் தேதி, என்னுடைய சார்பில் மகளிருக்கு அனுப்பி வைக்கப்படும் குறுஞ்செய்தியில், பணம் எடுப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால், அதுகுறித்து தகவல் தெரிவிக்க வேண்டிய Toll-Free எண்ணும் சேர்க்கப்பட வேண்டும். இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. தகுதியுள்ளவர்கள் என நாம் தேர்ந்தெடுத்துள்ளது 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேர்.

அப்படியானால் மற்றவர்களது கோரிக்கைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதை நாம்


4ம் பக்கம் பார்க்க







## ரூ.1.1 கோடி கேட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது இபிஎஸ் மான நஷ்ட வழக்கு

சென்னை, செப். 12–

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக 1 கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடு கேட்டு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.





சென்னை உயர் நீதிமன்றத்தில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த மாதம் சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் சனாதனத்தை ஒழிக்க வேண்டுமென அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியிருந்தார். அவரது பேச்சு பெரும் விவாதப்பொருளாக மாறியது. இந்த விவகாரத்தில் உதயநிதி செப்டம்பர் 7-ம் தேதி அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், 'சனாதனம் என்றால்என்ன'என்பதை வீட்டினுள் பத்திரமாக அடுக்கிவைத்திருக்கும் புத்தகங்களில் இருந்து நான் தேடிக்கொண்டிருப்பதாக கூறியிருந்தார்.

கோடநாடு கொலை கொள்ளை வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக ஆட்டுதாடியின் பின்னால் நீண்ட நாள் ஒளிந்திருக்க முடியாது என்றும், ஆடு ஒருநாள் காணாமல் போகும்போது, நீங்கள் என்ன ஆகப்போகிறீர்கள் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள் என்றும் பேசியுள்ளார்.

அவரது அறிக்கை தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், அவதூறு பரப்பு வகையிலும் உள்ளன. எனவே, தன்னை பற்றி பேச அமைச்சர் உதயநிதிக்கு தடை விதிக்க வேண்டும். ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடாக வழங்க உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கோரியுள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



▶ தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தலைமையில் வேளாண் நிதிநிலை அறிவிப்புகளின் தற்போதைய நிலை, ஒன்றிய அரசின் நிதியுதவி திட்டங்கள் மற்றும் NABARD திட்டங்கள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சர்க்கரைத்துறை ஆணையர் விஜயராஜ்குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சமயமூர்த்தி, வேளாண்மை ஆணையர் டாக்டர் எல். சுப்பிரமணியன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பிருந்தாதேவி, வேளாண்மை கூடுதல் இயக்குநர் ஸ்ரேயே பி சிங், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் (வே.பொ.) முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.






## பணியின் போது இறந்த புதுக்கோட்டை காவலருக்கு ரூ.70 லட்சம் நிவாரணம்

புதுக்கோட்டை

மஞ்சுவிரட்டு பணியின் போது காளை முட்டி இறந்த மீமிசல் காவல் நிலைய காவலர் நவநீத கிருஷ்ணனின் மனைவிக்கு HDFC வங்கி சம்பளத் தொகுப்பு திட்டத்தின் கீழ் விபத்து காப்பீட்டு நிதி ரூ.70 லட்சத்தை மாவட்ட காவல்கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே முன்னிலையில் நேற்று வழங்கப்பட்டது. புதுக்கோட்டைமாவட்ட காவல்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி உட்கோட்டம், கே.புதுப்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கல்லூர் கிராமத்தில் கடந்த 03.05.2023-ம் தேதி நடைபெற்ற மஞ்சுவிரட்டு பாதுகாப்பு பணியில் இருந்தபோது எதிர்பாராத விதமாக மஞ்சுவிரட்டு காளை முட்டி மறைந்த மீமிசல் காவல் நிலைய காவலர் து.நவநீதகிருஷ்ணன் என்பவரது மனைவி ந.சபரிக்கு நவநீதகிருஷ்ணனின் HDFC வங்கியின் சம்பள தொகுப்பு திட்டத்தின் கீழ் விபத்து காப்பீட்டு நிதி ரூ. 70லட்சத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே மற்றும் புதுக்கோட்டை மாவட்ட HDFC வங்கி நிர்வாக அதிகாரிகள் முன்னிலையில் வழங்கப்பட்டது. என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று

12-9-23



பிரதோஷம்

சக வருடம் 1945 பாத்ரபதம் 21

சாதம் வடித்த கஞ்சி தேய்த்து சிறிது நேரம் கழித்து குளித்தால் வேர்க்குரு மறையும்.

| சோபகிருது ஆவணி 26 | SEP - TUE செவ்வாய் | ச:பர் 25 தேய்பிறை 255 / 110 | இராசிபலன் |
|---|---|---|---|

தேய். திரயோதசி 54.52 (கா. 04.01) ஆயில்யம் 48.28 (கா. 01.27) தியாஜ் 17.35 அகஸ் 30.20 சித்த. பிரதோஷம். பெருவயல் ஸ்ரீமுருகப் பெருமான் பவனி. பிள்ளையார்பட்டி, தேவகோட்டை இத்தலங்களில் ஸ்ரீவிநாயக பெருமான் புறப்பாடு. குரங்கனி முத்துமாலையம்மன் புறப்பாடு. சிறிய நகசு.

| | நல்லநேரம் | கௌரி.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |


சூலம்: வடக்கு; பரிகாரம்: பால் — சிம்ம லக்கனம் இருப்பு நா. 1 வி. 01 — சந்திராஷ்டமம் பூராடம் உத்திராடம்

கரணம்: 7.30-9 — சூரிய உதயம்: 6.04

நீள நீளத் தெரியும் மெய்யும் பொய்யும்

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | லாபம் |
| மிதுனம் | நட்பு |
| கடகம் | பிரீதி |
| சிம்மம் | அன்பு |
| கன்னி | ஆசை |
| துலாம் | திடம் |
| விருச்சி | புகழ் |
| தனுசு | நலம் |
| மகரம் | அமைதி |
| கும்பம் | உயர்வு |
| மீனம் | நற்சொல் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்








| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,510 | Rs. 5,980 |


# "உதயநிதி தலைக்கு விலை வைத்தவர் போலி சாமியாராகவே இருக்க வேண்டும்" அண்ணாமலை

மதுரை , செப்.12–

'சனாதானத்தை பின்பற்றுவதாக கூறிக் கொண்டு ஒருவரின் தலைக்கு விலை நிர்ணயம் செய்பவர் போலி சாமியாராகவே இருக்க வேண்டும்' என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறினார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நேற்று பரமக்குடியில் உள்ள இமானுவேல் சேகரனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவர் சென்னை செல்வதற்காக மதுரை விமான நிலையம் வந்தார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "சனாதனம் குறித்து உதயநிதி ஸ்டாலின் கருத்து தெரிவிப்பது நல்லதுதான். அப்போதுதான் பாஜக வளரும். கருணாநிதி இருந்தால் எதிர்ப்புகளை சரியாக கையாள்வார். கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தமாட்டார். பாஜக தனித்துவத்தை தாண்டி, உதயநிதியால் அதிகளவில் வளர்ச்சி அடையும். இதை நாடாளுமன்றத் தேர்தலில் பார்ப்பீர்கள்.

அமைச்சர் உதயநிதி தலைக்கு பரிசுத் தொகை அறிவித்தது தவறு. ஒருவரின் தலைக்கு பரிசுத் தொகை நிர்ணயம் செய்பவர் சனாதனத்தை பின்பற்றவில்லை என்பதே அர்த்தம். சனாதானத்தை பின்பற்றுவதாக



கூறிக்கொள்பவர் ஒருவரின் தலைக்கு விலை வைப்பேன் என்றால், அவர் ஒரு போலி சாமியாராகத்தான் இருக்க வேண்டும். இது வன்மையாக கண்டிக்கக்கூடியது.

தமிழ்த் திரையுலகில் சாதிய வன்மங்கள் கொண்ட திரைப்படங்கள் வருகின்றன. சினிமாவில் என்ன கருத்துகளை சொல்கிறோம் என்பது முக்கியம். முக்கியமான கருத்துகளையே சினிமா மூலம் சொல்ல வேண்டும். ஒரு சில இடங்களில் வன்முறைகள் நடப்பதற்கு சினிமா காரணமாகிவிடுகிறது.

ஒரே நாடு ஒரே தேர்தலுக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு குழு அமைக்கப்பட்டுள்ளது. 1952–இல் இருந்து 1967 வரை 4 முறை ஒரே நாடு ஒரே தேர்தல் நடைபெற்றுள்ளது. இது பாஜகவின் கொள்கை முடிவு. இருப்பினும் உடனடியாக கொண்டுவர முடியாது. இந்தியாவை பாரத் என்றும், பாரத் என்பதை இந்தியா என்றும் பயன்படுத்துவதால் எந்த சட்ட சிக்கலும் ஏற்படாது என அரசியலமைப்பு சட்ட வல்லுநர்கள் கூறியுள்ளனர். எதிர்க்கட்சியினர் தேவையில்லாமல் பிரச்சினையை உருவாக்குகிறார்கள். பாரதம் என்ற வார்த்தை இந்தியாவை அழகாக நுட்பமாக காட்டுகிறது.

இண்டியா கூட்டணி வந்ததால் இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மையல்ல. பாஜக கொண்டு வந்துள்ள பல முக்கிய திட்டங்களில் பாரத் என்கிற பெயர் உள்ளது. இண்டியா கூட்டணி என்று நாங்கள் வைத்ததால்தான் அண்ணாமலை உயிரோடு இருக்கிறார் என்று கூட சொல்வார்கள். ஜி20 மாநாடு கட்சித் தலைவர்களை அழைப்பதற்கான மாநாடு இல்லை. முன்னாள் பிரதமர்கள் மற்றும் தற்போதைய முதல்வர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. யாரை அழைக்க வேண்டுமோ அழைத்துள்ளார்கள்.

சந்திரபாபு நாயுடு கைது குறித்து நான் கருத்து கூறினால் சரியாக இருக்காது. வேறு மாநிலத்தில் நடக்கும் பிரச்சினை எனக்கு தெரியாது. பாஜக கூட்டணியில் ஓபிஎஸ் சேர்க்கப்படுவாரா என்பதற்கு நான் கருத்து தெரிவிக்க எதுவும் இல்லை" என்று அண்ணாமலை கூறினார்.

# குற்றாலத்தில் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட முயன்ற பாஜகவினர் 88 பேர் கைது

தென்காசி, செப்.12–

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேருந்து நிலையம் முன்பு சனாதன எதிர்ப்பு கருத்தரங்கத்தில் சனாதனத்திற்கு எதிராக கருத்து கூறிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை கண்டித்தும், அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பதவி விலகக் கோரியும், தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது.

குற்றாலம் பேருந்து நிலையத்திலிருந்துஇந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் அலுவலகத்தை முற்றுகையிட முயற்சி செய்தபோது குற்றாலம் பேருந்து நிலையம் முன்பு வைத்து தென்காசி காவல் துணை கண்காணிப்பாளர்



நாக சங்கர் தலைமையிலான போலீசார் 8 பெண்கள் உள்ளிட்ட 88 நபர்களை கைது செய்தனர். இந்நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் ராஜேஷ் ராஜா தலைமை வகித்தார், மாவட்ட பொதுச் செயலாளர்கள் பாலகுரு நாதன், ராமநாதன், அருள் செல்வன், பொருளாளர் பாலகிருஷ்ணன், சிறப்பு அழைப்பாளர் திருநெல்வேலி பாராளுமன்ற பொறுப்பாளர் நீல முரளி யாதவ், மற்றும் மாவட்ட துணைத் தலைவர்கள் முத்துக் குமார், ராதாகிருஷ்ணன், பால்ராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு ஒன்றியத் தலைவர் முருகன், தெற்கு ஒன்றியப் பார்வையாளர் செந்தூர் பாண்டியன், நகரத் தலைவர் மந்திர மூர்த்தி, வேம்பு ராஜ், மகளிர் அணித் தலைவி அனிதா, பிரச்சார பிரிவு சங்கரநாராயணன், இளைஞர் அணி விவேக் குமார், அரசு தொடர்பு பிரிவு மாவட்டத் தலைவர் குத்தாலிங்கம், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பலர் இதில் கலந்து கொண்டனர்.








▶ மதுரை பாண்டி கோயில் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் புதுவை தேவர் பேரவை துணைப் பொருளாளர் ராஜ் அம்பலம் – செல்வி (ஆசிரியை பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி) ரவி – வனஜா ஆகியோர்களின் இல்ல திருமண விழா மன்னார்குடி திவாகரன் தலைமையிலும் ஜெயச்சந்திரன் (ரிட்டேடு காவல் துறை எஸ்.பி) தாய் மாமன் குமரேசன் ஆகியோர் முன்னிலையிலும் சிறப்பாக நடைப்பெற்றது, இந்நிகழ்வில் அரசியல் கட்சி தலைவர்கள், தொழில் அதிபர்கள், குடும்பத்தினர்கள், உறவினர்கள் , நண்பர்கள் என பலர் கலந்து கொண்டு மணமக்கள் பிரவீன் – வைஷ்ணவி ஆகியோரை வாழ்த்தினர்.



▶ ஜீசஸ் அழைக்கிறார் பால் தினகரன் மகள் ஸ்டெல்லா ரமோலா வுக்கும், ஜோஷ்வா ஸ்டீபன் மகன் டேனியல் டேவிட்சனுக்கும் நேற்று மாலை திருமணம் சென்னை ஜீசஸ் அழைக்கிறார் அரங்கில் நடைபெற்றது. மணமக்களை நடிகர் எஸ்வி சேகர் வாழ்த்தினார். வரவேற்பு நிகழ்சி நடைபெற உள்ளது.



▶ தென்காசி மாவட்டம் இலத்தூரில் தென்காசி முன்னாள் திமுக மாவட்டச் செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா. செல்லத்துரை தலைமையில் சுதந்திரப் போராட்டத் தியாகி இமானுவேல் சேகரன் 66–வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர், நிகழ்ச்சியில் திமுக நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ், துணைச் செயலாளர் காசி, திட்டக்குழு உறுப்பினர் முருகன், காளிமுத்து, மஜித், முதலியான் கான், நல்லையா முருகானந்தம் மூப்பன் ஹபிபுர் ரஹ்மான், 8–வது வார்டுசெயலாளர்முருகையாமற்றும் இலத்தூர் திமுக கிளைச் செயலாளர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சத்தியமங்கலம் சுதர்சன் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான துவக்க விழா

சத்தியமங்கலம், செப்.12–

சத்தியமங்கலம் சுதர்சன் பொறியியல் கல்லூரியில் நேற்று முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான துவக்க விழா நடைபெற்றது, இதில் கல்லூரியின் தாளாளர் விஜயகுமார் தலைமை ஏற்க கல்லூரி முதல்வர் கே ஸ்ரீனிவாசன் துவக்க உரை ஆற்றினார். சிறப்பு அழைப்பாளராகதிருச்சி பிஷப் ஹிபர் கல்லூரியில் துணை முதல்வர் சத்தியசீலன் வருகை புரிந்திருந்தார், அவர் தன்னுடைய அசாத்திய திறமையான வயலின் வாசித்து விழாவை சிறப்பித்தார்.



மேலும் அவர் கூறுகையில் மாணவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தையும் வாய்ப்புகள் வரும் அவற்றைப் பற்றிக் கொள்வதற்கான அறிவுரைகளையும் கூறி மாணவர்களை ஊக்குவித்தார், அனைவரின் மனதிலும் நிலைத்து நின்ற அவருடைய பேச்சை தொடர்ந்து விழா நாயகி பேராசிரியர் பர்வீன் சுல்தானா கலந்து கொண்டு மேலும் சிறப்பித்தார், முதலாம் ஆண்டுமாணவர்களுடன் விழாவிற்கு வந்திருந்த அனைத்து பெற்றோர்களும் மனமகிழ்வுடன் அவரது பேச்சைக் கேட்டனர். பற்பல நிகழ்வுகளை கூறி மாணவர்களை ஊக்குவித்த அவர் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு மிகவும் ஊக்குவிக்கும் வகையில் எவ்வாறு வாழ்வில் முன்னேற வேண்டும் எவ்வாறு வாய்ப்புகளை நழுவ விடக்கூடாது என்றும் வாழ்வில் மென்மேலும் முன்னேற பல வழிமுறைகளை எடுத்துரைத்தார்.

சாதிப்பதற்கு வயதும் கல்வியும் திறமையும் அறிவும் தாண்டி நம் ஆழ்மனதில் நாம் வெற்றியடைய வேண்டும் என்ற சிந்தனை நிலைத்து நிற்கவேண்டும் என்பதை மிக அழகாக கூறினார்.

விழாவிற்கு தலைமை தாங்கிய கல்லூரியின் நிறுவனர் ஸ்ரீ வி கே சுந்தரம் அவரது துணைவியார் இராஜி சுந்தரம், இவ்விழாவினை சிறப்பிக்கும் விதமாக வருகை புரிந்த நிறுவன உறுப்பினர்கள் விஸ்வநாதன், ராமசந்திரன், ராதாகிருஷ்ணன், பாலசுப்ரமணியன் மற்றும் அம்பி வென்சர்ஸ் சி.இ.ஓ. பிரதிப் குமார் முதலாம் ஆண்டு மாணவ, மாணவிகளை வாழ்த்தினர். பின்னர் முதலாம் ஆண்டு மாணவ சேர்க்கை அதிகாரி ஹேமலதா நன்றியுரை ஆற்றினார்.

# தமிழகத்தில் கட்டுக்குள் இருக்கிறது டெங்கு பாதிப்பு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை , செப்.12–

"தமிழகத்தில் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக டெங்கு என்பது கட்டுக்குள் இருந்து வருகிறது. இந்த ஆண்டும் கூட மிகப் பெரிய அளவில் கட்டுக்குள்தான் இருந்து வருகிறது. கடந்த ஜனவரி 1-ம் தேதி தொடங்கி செப்டம்பர் 10-ம் தேதி வரை 3 பேர் டெங்குவால் இறந்துள்ளனர்" என்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு ரூ.1.50 கோடி மதிப்பில் பார்வையாளர்கள் தங்குமிடம் கட்டடம் கட்டுவதற்கான இடத்துக்கான ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியது: "மதுரவாயல் பகுதியில் 4 வயது சிறுவன் டெங்கு பாதிப்பால் மரணம் அடைந்திருக்கிறார். கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக, டெங்கு என்பது கட்டுக்குள் இருந்து வருகிறது. இந்த ஆண்டும் கூட மிகப் பெரிய அளவில் கட்டுக்குள்தான் இருந்து வருகிறது.

இருப்பினும், நேற்று வரை டெங்கு பாதிப்புக்குள்ளாகி, மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை 253 பேர். இந்த 253–ல், கடந்த ஜனவரி 1ம் தேதி தொடங்கி செப்டம்பர் 10–ம் தேதி வர் 3 பேர் டெங்குவால் இறந்துள்ளனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, மருத்துவமனைகளில் மாதிரிகள் எடுத்து பரிசோதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 12 ஆயிரத்து 121 பேர். தமிழகம் முழுவதும் டெங்கு கொசு ஒழிப்பில் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும் என்ற வகையிலும், இறப்பு இல்லாத நிலையை தமிழகத்துக்கு கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையிலும், நாளை தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்



அலுவலர்களுக்கான கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற உள்ளது" என்று அவர் கூறினார்.

சென்னை மதுரவாயல் பிள்ளையார் கோயில் தெருவை சேர்ந்தவர் அய்யனார். இவரது மனைவி சோனியா. இவர்களின் 4 வயது மகன் ரக்ஷன். அப்பகுதியில் உள்ள பள்ளியில் மழலையர் வகுப்பு படித்து வந்தார். கடந்த வாரம் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. காய்ச்சல் குறையாததால், கடந்த 6-ம் தேதி சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் சிறுவன் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனையில் சிறுவனுக்கு டெங்கு காய்ச்சல் இருப்பது உறுதியானது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் சிறுவனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், டெங்கு காய்ச்சலின் தீவிர பாதிப்பால் நேற்று முன்தினம் இரவு சிறுவன் உயிரிழந்தார். டெங்கு காய்ச்சலுக்கு சிறுவன் உயிரிழந்திருப்பது அப்பகுதி மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மதுரவாயல் பகுதியில் சுகாதாரப் பணிகள் சரியாக நடைபெறாததே சிறுவன் உயிரிழக்க காரணமென்று பெற்றோர், அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டினர். சுகாதார அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரி சிறுவனின் உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் மதுரவாயல் சாலையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டதால் போலீஸார் குவிக்கப்பட்டனர். அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து, போராட்டத்தை அவர்கள் கைவிட்டனர். அப்பகுதிக்கு வந்த சுகாதாரப் பணியாளர்கள், தூய்மைப் பணியில் ஈடுபட்டனர். டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ்களை வீட்டின் கதவுகளில் ஒட்டினர். அப்பகுதி மக்கள் கூறுகையில், "இந்த பகுதியில் 3 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதனால், குடிநீர் தொட்டிகளில் தண்ணீரை சேமித்து வைத்து பயன்படுத்தி வருகிறோம். கடந்த சில தினங்களாக பெய்த மழையால் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதுவே டெங்கு காய்ச்சல் பரவ காரணமாக உள்ளது" என்றனர்.

### மயிலாடுதுறை தேமுதிக நிர்வாகி இல்ல திருமண நிகழ்வு

# தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்திற்கு உற்சாக வரவேற்பு

குத்தாலம், செப்– 12:

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் மாதிரிமங்கலம் ஊராட்சி தேமுதிக நிர்வாகி இல்ல திருமணத்திற்கு தேசிய முற்போக்கு திராவிட கழக மாநில பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் பங்கேற்று மணமக்களை வாழ்த்தி பேசினார்.



மயிலாடுதுறை மாவட்ட தேமுதிக துணைச் செயலாளர் எம் கே சாரங்கபாணி மகன் சா துவாஸ்கரன் திருமணத்திற்கு மாநில பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் வந்திருந்தார் அவருக்கு வழி நெடுகிலும் தொண்டர்களால் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. திருமணத்திற்கு செல்லும் வழியில் குத்தாலம் தேரடியில் தேச ஒற்றுமைக்கும் தேச நலன் கருதியும் சுடர் ஓட்டத்தை பிரேமலதா விஜயகாந்த் தொடங்கி வைத்தார்.

பின்னர் மாதிரிமங்கலம் தனியார் திருமண மண்டபத்திற்கு செல்லும் வழியில் தேமுதிகவினர் பட்டாசு வெடித்து, செண்டை மேளம் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர். தேமுதிக மாவட்ட அவை தலைவரும் பரசலூர் ஒன்றிய கவுன்சிலருமான கே. எஸ். கிருஷ்ணன் மற்றும் மாவட்ட செயலாளர் ஜலபதி தலைமையில் ஆயிரக்கணக்கான தேமுதிகவினர் மயிலாடுதுறையில் இருந்து குத்தாலம் வரையிலும் இருசக்கர வாகனங்களில் கட்சி கொடி ஏந்தியவாறு ஊர்வலமாக சென்று திருமணத்தில் பங்கேற்றனர்.

# புதுக்கோட்டையில் பாஜக மாநில பொதுச்செயலாளர் கருப்பு முருகானந்தம் கைது



புதுக்கோட்டை , செப்,12

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவை கண்டித்து புதுக்கோட்டை மாவட்ட இந்து சமய அறநிலைத்துறை அலுவலகத்தை முற்றுகையிட சென்ற பாஜக மாவட்டத் தலைவர் விஜயகுமார் தலைமையில் மாநில பொதுச்செயலாளர் கருப்பு முருகானந்தம் உள்ளிட்ட 100க்கு மேற்பட்ட நிர்வாகிகள் கைதாகி விடுதலையானார்கள்.

தமிழ்நாடு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சேகர்பாபுவை கண்டித்து புதுக்கோட்டையில் பாரதிய ஜனதா கட்சி மாவட்ட தலைவர் விஜயகுமார் மற்றும் மாநில பொதுச் செயலாளர் கருப்பு முருகானந்தம் ஆகியோர் தலைமையில் புதுக்கோட்டை வடக்கு மூன்றாம் வீதியில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்ட ஊர்வலமாக வந்த 100க்கும் மேற்பட்டோரை காவல்துறையினர் சாலையில் பேரிக்காடுகள் மூலம் தடுப்புகள். அமைக்கப்பட்டு பாதியிலே தடுத்து நிறுத்தினர்.இதனையடுத்து பாஜகவினருக்கும் காவல்துறையினருக்கும் இடையே வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து பாஜகவினர் தமிழக அரசுக்கும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர். இதனையடுத்து பாஜகவினரை காவல்துறையினர் கைது செய்து அழைத்துச் சென்றனர். இதனால் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

போராட்டத்தின் போது, செய்தியாளர்களிடம் கருப்பு முருகானந்தம் கூறுகையில்: தமிழகத்தில் ஊழல், தீண்டாமை, பெண் அடிமை, மது போன்றவை ஒழிக்கப்பட வேண்டியுள்ளது. இதைப் பற்றி ஆட்சியாளர்கள் கவலைப்படாமல், இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இதெல்லாம் திமுகவுக்கு வாக்களித்தவர்களுக்கு செய்யும் துரோகம். அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் பேச்சுக்கு எதிராக இந்தியா முழுவதும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. இதன் மூலம் இண்டியா கூட்டணி உடைந்து சிதறும். சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்ட அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு பதவி விலக வேண்டும். இல்லையேல், தமிழகம் முழுவதும் அமைச்சர்களுக்கு எதிராக கருப்புக் கொடி காட்டும் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தார்.

# அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில் பாரதியார் நினைவுநாள் விழா



அரியலூர்,செப்.12–

அரியலூர் அருகில் வள்ளலார் கல்வி நிலையத்தில் பாரதியார் நினைவுநாள் விழா கொண்டாடப்பட்டது, இது பற்றி லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலைய தலைமை ஆசிரியர் சௌந்தர்ராஜன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது,

அரியலூர் அருகே உள்ள லிங்கத்தடிமேடு வள்ளலார்கல்விநிலையம், அரசு உதவி பெறும் கே .ஆர் .வி நடுநிலைப் பள்ளியில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவுநாள் விழா கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கல்வி நிலைய தலைவர் சீனி.பாலகிருஷ்ணன் தலைமையேற்றார். செயலாளர் கொ.வி. புகழேந்தி வரவேற்றார், மாணவ, மாணவிகள், இருபால் ஆசிரியர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்,

முடிவில் பள்ளியின் தலைமை ஆசிரியர் பெ.சௌந்தர்ராஜன். நன்றி கூறினார்.

## சென்னை வண்ணாரப்பேட்டையில் குறும்படம் எடுப்பதாக கூறி

# மிட்டாய் வியாபாரியிடம் 15 லட்சம் ரூபாய் மோசடி செய்த இளைஞரை போலீசார் தேடி வருகின்றனர்



சென்னை, செப்,12

சென்னை கொடுங்கையூர் கிருஷ்ணமூர்த்தி நகர், சுசிலா நகர் அகத்தியர் தெருவை சேர்ந்த 33 வயது உடைய பிரசன்ன குமார் சென்னை பழைய வண்ணாரப்பேட்டை வள்ளுவன் தெருவில் 8 வருடமாக மிட்டாய் வியாபாரம் செய்து வருகிறார் அவரது நண்பர் மூலம் அறிமுகமான தண்டையார்பேட்டை சுந்தரம் பிள்ளை நகர் 2வது தெருவை சேர்ந்த 23 வயது உடைய ரிஸ்வான் அதே கடையில் வேலை செய்து திரைப்படத்திற்கு கதை எழுதி வந்துள்ளார் எழுதி வைத்திருந்த கதையை பிரசன்ன குமாரிடம் காண்பித்து வந்துள்ளார்.

இதனையடுத்து பிரச்சன குமாரிடம் ரிஸ்வான் செக்ஸ் எஜுகேஷன் என்ற குறும்படம் எடுக்க போவதாகவும் குறும்படம் எடுத்து ஒ டி டி தலத்தில் வெளியிடுவதாக கூறி அதற்காக ரூபாய் 15 லட்சம் ரூபாய் பணம் தேவைப்படுவதாக கூறியுள்ளார் இதனையடுத்து கடந்த ஜனவரி மாதம் பிரசன்னா குமரிடம் 2 லட்சம் ரூபாய் அட்வான்ஸ் தொகையாகவும் வங்கி கணக்கில் 5 லட்சம் ரூபாய் பணத்தை சொலுத்தியுள்ளார்.

சிறுக சிறுக சுமார் 15 லட்சம் ரூபாய் பணத்தை பெற்று கொண்டு மார்ச் மாதம் 15 லட்சத்து 50 ஆயிரம் தருவதாக கூறி இரண்டு மாதகாலமாக பணத்தை கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளார் பணம் மோசடி செய்த ரிஸ்வான் மீது நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டு தர கோரி வண்ணாரப்பேட்டை உதவி ஆணையரிடம் மிட்டாய் வியாபாரி பிரசன்ன குமார் கடந்த மே மாதம் புகார் அளித்தார் புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு விசாரணை மேற்கொண்டு வந்த போது ரிஸ்வான் தலைமறைவான நிலையில் ரிஸ்வான் தாய் சுஜாதாவை நேற்று முன் தினம் போலீசார் கைது செய்து வழக்கு பதிவு செய்து ஜார்ஜ் டவுன் 15வது நீதிமன்ற மேஜிஸ்திரேட் முன்பு ஆஜர்படுத்தினர் சுஜாதாவை நிபந்தனை ஜாமின் வழங்கி மேஜிஸ்திரேட் உத்தரவிட்டார் மோசடி புகாரில் தலைமறைவாக உள்ள ரிஸ்வானை போலீசார் தேடி வருகின்றனர்

## உடையார்பாளையம் அருகே

# எம்.ஆர்.சி கல்வி நிறுவனங்கள் சார்பாக பாரதியார் நினைவு நாள் கருத்தரங்கம்



அரியலூர்,செப்.12–

உடையார்பாளையம் அருகே எம் ஆர் சி கல்வி நிறுவனங்கள் சார்பாக பாரதியார் நினைவு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இது பற்றி கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம். ஆர். ரகுநாதன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் சார்பாக, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது .இதில் அவரது வாழ்க்கை வரலாறு, அவர் எழுதிய நூல்கள், இலக்கியம், விடுதலை போராட்டம், பெண் விடுதலை, கவிதைகள் மற்றும் அவருடைய தமிழ்ப்பணி உள்ளிட்டவை பற்றிய கருத்துக்களை, பேராசிரியர்கள் வே.சதீஷ்குமார், குருநாதன் , அஜித் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

கருத்தரங்கில் கல்லூரி மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், மணஞ்சேரி கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. நிகழும் மங்களகரமான ஸ்ரீ சோபகிருது வருடம், ஆவணி மாதம் 24 ஆம் ஞாயிற்றுக்கிழமை, ஏகாதசி திதி, புனர்பூசம் நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோகத்தில் சுப தினத்தில் காலை 7.00 மணிக்கு மேல் 8:30 மணிக்குள் ஆலய கோபுர கும்பாபிஷேகமும் ஸ்ரீ சித்தி விநாயகருக்கு மகா அபிஷேகமும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் 16 வது வார்டு நகர மன்ற உறுப்பினர் ஆர்.ராஜி,16 வது வார்டு கழகச் செயலாளர் ஆர்.ஜெகன், பில்டிங் காண்ட்ராக்டர் ஆர்.சுரேஷ் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். குன்றத்தூர் நகரக் கழகச் செயலாளர் மற்றும் நகரமன்ற செயலாளர் கோ.சத்தியமூர்த்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கும்பாபிஷேக விழாவினை சிறப்பித்தார்.



காரைக்கால் மாவட்டத்தில் வருகிற செப்டம்பர் மாதம் 27ஆம் தேதி உலக சுற்றுலா தின விழா சென்றாண்டை போல் கொண்டாடப்படுவது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நேற்று காலை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வை காரைக்காலில் கொண்டாடுவது சம்பந்தமாகவும் மினி மாறத்தான், பீச் வாலிபால், படகு போட்டி, கபடி போட்டி மற்றும் கலை நிகழ்ச்சி உள்ளிட்டவைகள் நடத்துவது சம்பந்தமாகவும் மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மேலும் வரும் பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் மேலும் மருத்துவ வசதிகள் அனைத்தும் தயார் நிலையில் இருக்க ஆட்சியர் கூறினார். மேலும் பொதுமக்களுக்கு சென்று வர பேருந்து வசதிகள் மற்றும் ஆம்புலன்ஸ் வசதியும் தயார் நிலையில் இருக்க ஆட்சியர் அறிவுருத்தினார். இந்நிகழ்வில் வனத்துறை அதிகாரி விஜி ,IFS துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் பொதுப்பணித்துறை. மின்துறை, கல்வித்துறை, செய்தித்துறை உள்ளிட்ட துறை அதிகாரிகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# அரியலூர் பெருமாள் கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இலவச திருமணம்



அரியலூர், செப்.12–

அரியலூர் பெருமாள் கோயிலில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், மூன்று ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தப்பட்டது. இது பற்றி அரியலூர் ஆலந்துறையார் கோதண்ட ராமசாமி கோயில் நிர்வாக அலுவலர், சரவணன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

நேற்று காலை, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கடலூர் மண்டலத்துக்கு உட்பட்ட, அரியலூர் மாவட்டம், மற்றும் அரியலூர் நகர், அருள்மிகு ஆலந்துறையார் கோதண்ட ராமசாமி திருக்கோயிலில், இலவச திருமண திட்டத்தின்படி, 3 (மூன்று) இணைகளுக்கு, அரியலூர் தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) கலைவாணன் முன்னிலையில், திருமணம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக, அரியலூர் மாவட்டம், கல்லங்குறிச்சி கிராமம், அருள்மிகு கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோயில் ஆதீன பரம்பரை தர்மகர்த்தா வெங்கடாஜலபதி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இலவச திருமணத்தில் பங்கேற்ற மூன்று ஜோடி தம்பதியர்க்கும், மாங்கல்யம் உட்பட தலா 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டது. இந்த திருமண உற்சவத்தில் என்னுடன், கல்லங்குறிச்சி அருள்மிகு கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோயில் நிர்வாக அலுவலர் செல்வம் மற்றும் மணமக்களின் பெற்றோர், உறவினர் உள்பட பலர் கலந்து கொண்டனர், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அதிகளவில் காவியங்கள் எழுதி, 5-வது முறையாக

# உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றார் சென்னை பேராசிரியர் கலைப்புனிதன்



சென்னை, செப்,12

செம்மொழி தமிழ் வளர்ச்சிக் கழக செயலாளர் வழக்கறிஞர் பாபு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

சென்னையைச் சேர்ந்த பேராசிரியர் கலைப்புனிதன். கடந்த 1993-ம் ஆண்டு முதல் ஏப்ரல் 2023-ம் ஆண்டு வரை கடந்த 30 ஆண்டுகளில் தமிழுக்கு தொண்டாற்றிய தொன்மையான புலவர்கள், கவிஞர்கள், சங்க கால மன்னர்கள், அரசியல் தலைவர்கள், உலகம் போற்றும் உத்தமர் கள், போற்றுதலுக் குரிய அறிஞர்கள், உலக சாதனையாளர்கள், மக்களால் கொண்டாடப்பட்ட மாமனிதர்களின் வாழ்க்கையையும், அவரது சாதனைகளையும் பல்வேறு பணிகளையும் கவிதையாக தொகுத்து இதுவரை 50 காவியங்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

இன்றைய தலைமுறையினரும் பாமர மக்களும் தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் காவியங்களை எழுதியுள்ளார். இவர் 50 காவியங்கள் உள்பட 135 நூல்களையும் எழுதியுள்ளார்.

இவரது 30 ஆண்டு கால எழுத்துப் பணி மூலம் வெளிவந்துள்ள அனைத்து காவியங்களையும் பட் டியலிட்டு, அவை வெளியான வருடம் மற்றும் இதர விபரங்களுடனும் உரிய சான்றுகளுடனும் லண்டனில் இருந்து வெளிவரும் கோல்டன் புக் ஆப் வேர்ல்டு ரெக்கார்ட்ஸ் நிறுவனத்திற்கு 2 மாதங்களுக்கு முன்பு செம்மொழி தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டது.

எங்களது பரிந்துரையை பரிசீலித்து பேராசிரியர் முனைவர் கலைப்புனிதன் தமிழல் எழுதியுள்ள 50 காவியங்கள் மூலம் உலகிலேயே அதிகமான காவியங்களை எழுதிய ஆசிரியர் என அவரை பாராட்டி சான்றிதழ் அளித்துள்ளதோடு, உலக சாதனை புத்தகத்தின் ஆசிய பதிப்பிலும் சாதனை விபரங்களை வெளியிட்டுள்ளது.

அதிக காவியங்கள் எழுதி சாதனைப் புரிந்துள்ள பேராசிரியர் கலைப் புனிதன், உலகிலேயே அதிக எம்.ஏ. பட்டங்கள் பெற்றவர். ஒரே அரசு பல்கலைக்கழகத்தில் அதிகமான பட்டங்கள் பெற்றவர்.

உலகிலேயே நீளமான கடிதத்தை எழுதியவர். உலக பொது மறையாம் திருக்குறளின் 1330 பாடல்களையும் மனப்பாடம் செய்து 5 மணி நேரம் 48 நிமிடத்தில் எழுதி உலக சாதனை என ஏற்கனவே நான்கு முறை உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாவது முறையாக அதிக காவியங்கள் படைத்து உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பேராசிரியர் கலைப்புனிதனை தமிழறிஞர்களும், சாதனையாளர்களும், பொது மக்களும் பாராட்டி வருகின்றனர்

## இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில்

# 3 இணைகளுக்கான திருமணங்கள் கலெக்டர் மெர்சிரம்யா தலைமையில் நடைபெற்றது



புதுக்கோட்டை , செப்,12

புதுக்கோட்டை திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 3 இணைகளுக்கான திருமணங்களை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசை பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் பொருளாதாரம் உயரும் வகையில் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதனடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறையில் சார்பில் திருக்கோயில்களில் ஏழை, எளிய குடும்பங்களை சார்ந்த மணமக்களுக்கு திருமணங்கள் நடத்தி, சீர்வரிசை பொருட்களை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி குளத்தூர் வட்டத்தைச் சேர்ந்த 3 இணைகளுக்கான திருமணங்களை நடத்தி வைத்து, ரூ.50,000 மதிப்பிலான 4 கிராம் திருமாங்கல்யம், மணமகன், மணமகள் ஆடை, மாலை, புஷ்பம், பீரோ, கட்டில், மெத்தை, 2 தலையணைகள், பாய், 2 கைகடிகாரம், மிக்ஸி, பூஜை பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் 20 நபர்களுக்கு உணவு உள்ளிட்ட சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மணமக்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்துள்ளார். எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அனிதா, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் லியாகத் அலி, நகர்மன்ற உறுப்பினர் ரமேஷ்பாபு, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# புதுக்கோட்டை நகரில் பெண்ணிடம் 6 பவுன் சங்கிலி பறிப்பு

புதுக்கோட்டை, செப்.12–

புதுக்கோட்டை பெரியார்நகரை சேர்ந்தவர் உதயகுமாரி (வயது 49). இவர் ஞாயிறு இரவு மொபட்டில் தனது குழந்தையுடன் பேருந்து நிலையத்திற்கு பின்புறம் கம்பன்நகர் சாய்பாபா கோவில் அருகே சென்று கொண்டிருந்தார். அப்போது பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த மர்மநபர்கள், உதயகுமாரி கழுத்தில் கிடந்த 6 பவுன். தங்கச்சங்கிலியை பறித்து விட்டு தப்பியோடினர். இது குறித்து, அவர் உடனடியாக டவுன் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். தகவல் அறிந்ததும் போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். மேலும் அந்த பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை பார்வையிட்டு வருகின்றனர். மேலும் தப்பியோடிய மர்மநபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

காவல்துறை சார்பில் கம்பன் நகர், பெரியார் நகர் பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டு இருக்கக்கூடிய கண்காணிப்பு கேமராக்கள் அனைத்தும் பழுதடைந்து போய்விட்டதால் இதுபோன்ற சமூக விரோதிகள் தொடர் சமூக விரோத செயலில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்ட காவல்துறையும் கண்காணிப்பு கேமராக்களை சரி செய்ய எந்த நடவடிக்கையும் எடுப்பதாக தெரியவில்லை இது அவர்களுக்கு மிகுந்த சாதகமாக அமைந்து போய்விட்டது. செயின் பறிப்பில் நிலை தடுமாறி கீழே விழுந்த உதயகுமாரியும் அவரது குழந்தையும் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று தற்போது வீட்டில் ஓய்வு எடுத்து வருகின்றனர்.



தியாகி இம்மானுவேல் சேகரன் 66-வது நினைவு தினத்தை முன்னிட்டு பரமக்குடியில் உள்ள அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா ஈஸ்வரன் எம்எல்ஏ, தென்காசி எம்பி தனுஷ் குமார், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன், பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, இராமநாதபுரம் திமுக மாவட்டச் செயலாளர் காதர் பாஷா என்ற முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்துகொண்டு இம்மானுவேல் சேகரன் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.



புதுக்கோட்டையில் பிரம்மாண்டமான நிறுவனமாக இயங்கி வரும் ஸ்ரீ பார்வதி ஜுவெல்லர்ஸின் புதிய கிளையை நேற்று கறம்பக்குடியில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார், இந்நிகழ்வில் ஸ்ரீ பார்வதி ஜுவெல்லர்ஸின் உரிமையாளர் முருகராஜ் ஆச்சாரியார் வரவேற்புரையாற்றி சிறப்பித்தார், இதில் சிறப்பு விருந்தினர்களாக புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், வர்த்தக சங்க நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், ரோட்டரி சங்க நிர்வாகிகள் மற்றும் பார்வதி ஜுவல்லர்ஸ், வாடிக்கையாளர்கள் பொது மக்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## முதல்வர் தகவல்... முதல் பக்க தொடர்ச்சி

அவர்களுக்குச் சொல்லியாக வேண்டும். எந்த அடிப்படையில் உங்களது கோரிக்கையை எங்களால் ஏற்க முடியவில்லை என்பதற்கான காரணத்தை குறிப்பிட்டு அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பியாக வேண்டும். அப்படி அனுப்பினால் பெரும்பாலானவர்கள் மனநிறைவு அடைவார்கள். சிலருக்கு சந்தேகங்கள் இருக்கலாம், மறுபடியும் நம்மிடம் விண்ணப்பிப்பார்கள். அவர்களுக்கும் அத்தகைய வாய்ப்பை நாம் வழங்க வேண்டும். வாய்ப்பை வழங்கினால் பொதுமக்களுக்கு அரசின் மீது மிகுந்த நம்பிக்கை ஏற்படும்.

வருகிற 15-ம் நாள் அன்று மாவட்டத் தலைநகரங்களில் இதற்கான விழா நடக்க இருக்கிறது. பணம் கிடைத்தவர்கள் மகிழ்ச்சியாக வருவார்கள். பணம் கிடைக்காத மகளிர் யாராவது அந்த இடத்துக்கு வந்து கேட்டால், பதில் சொல்வதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். தனியாக இதற்கென அலுவலர்களை உட்கார வைத்து, இப்படி கேட்க வரும் மகளிரிடம் கோரிக்கை மனுக்களை வாங்கி, 'நாங்கள் பரிசீலிக்கிறோம்' என்பதைச் சொல்லி அனுப்பி வைக்க வேண்டும். இது மிகமிக முக்கியமாகும். இதைச் செய்யாவிட்டால், ஏதாவது ஒரு இடத்தில் பிரச்சினை என்றாலும், அது மாநிலம் முழுவதும் பெரிய செய்தியாக மாறிவிடும். அதனால் கவனமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும், இந்த திட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன். அரசுக்கும் வங்கிகளுக்கும், வங்கிகளுக்கும் பொதுமக்களுக்குமான தொடர்பு சீராக அமைந்து வருகிறதா என்பதை மாதம் தோறும் கண்காணிக்க வேண்டும். மாதத்தில் முதல் ஒருவார காலம் இந்த திட்டத்துக்காக தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும் மாபெரும் திட்டம் இது. ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர் மாதம் தோறும் பயனடையும் திட்டம் இது. எனவே, இத்திட்டம் குறித்து தொடர்ந்து நாம் மக்களிடம் எடுத்துச்சொல்லி வர வேண்டும்.

மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் மூலம் மாணவியருக்கு 1000 ரூபாய், இளைஞர்களுக்கு நான் முதல்வன் திட்டம், மகளிருக்கு மாதம் தோறும் 1000 ரூபாய் உரிமைத் திட்டம் ஆகிய 5 திட்டங்களைப் பற்றியும் திரும்பத் திரும்ப மக்களிடம் எடுத்துச் சென்று கொண்டே இருக்க வேண்டும். எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், அதனை முறையாகச் செயல்படுத்தினாலே, அதனால் பயனடைந்தவர்கள் மிகப்பெரிய அளவுக்கு நம்மைப் பாராட்டி பேசுவார்கள். அத்தகைய பாராட்டுகளை மட்டுமே பெற்றுத்தரும் திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்திக் காட்ட வேண்டும்" என்று முதல்வர் பேசினார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வளர்ச்சி ஆணையர் முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் தாரேஸ் அகமது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் இளம்பகவத், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதுக்கோட்டை புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரியில்

# வளங்குன்றா வேளாண்மை மற்றும் உணவு பாதுகாப்பிற்கான நவீன தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு

புதுக்கோட்டை, செப்.12-



புதுக்கோட்டை புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி மற்றும் சென்னை நேஷனல் அக்ரோ பவுண்டேஷன் இணைந்து நடத்திய வளம்குன்றா வேளாண்மை மற்றும் உலகளாவிய உணவுப் பாதுகாப்புக்கான நவீன தொழில்நுட்பம் குறித்த சர்வதேச புதுக்கோட்டை புஷ்கரம் வேளாண்மை கல்லூரியில் நடைபெற்றது. மாநாட்டில் 100 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டன.

மாநாட்டில் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த அறிஞர்கள் பங்கேற்று தங்களது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். ரகுராமன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பெல்ஜியத்தின் அக்சஸ் அக்ரிகல்சர் நிர்வாக இயக்குனர். ஜோசஃபின் ரோட்ஜர்ஸ், நிலையான மற்றும் வழக்கமான விவசாயம் ஆகிய இரண்டின் முக்கிய கூறுகளில் கவனம் செலுத்தினார். மேலும் அவர் மண் மேலாண்மை, பயிர் மேலாண்மை, நீர் மேலாண்மை, நோய் மற்றும் பூச்சி மேலாண்மை, கழிவு மேலாண்மை ஆகியவை பற்றி எடுத்துரைத்தார். இறுதியாக புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரியின் மண்ணியல் துறைப்பேராசிரியர் எஸ். செல்வ அன்பரசு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், நன்றியுரை வழங்கினார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் எம். பெரியசாமி உணவுப் பாதுகாப்பு சிறப்புரை நிகழ்த்தினார் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் செயல்பாடுகளை பாராட்டி பேசினார், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் எம். வி. ஸ்ரீராமச்சந்திர சேகரன், நீடித்த வேளாண்மையில் மண்ணின் தாக்கம் குறித்து சிறப்புரையாற்றினார், கீரமங்கலம் நக்கீரர் தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இயக்குநர் .ச.வே. காமராசு, தென்னை விவசாய தொழில் நுட்பங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

மேலும், இந்திய அரசின் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சகம் புதுக்கோட்டை நேரு யுவ கேந்திரா மாவட்ட இளைஞர் அலுவலர் . கே. ஜோயல் பிரபாகர் தனது சிறப்புரையில் விவசாய சமுதாயத்தின் வளர்ச்சியில் நேரு யுவ கேந்திராவின் பங்கை விளக்கினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஈச்சங்கோட்டை வேளாண் அறிவியல் கல்லூரி முதல்வர் அ.வேலாயுதம் வாழ்த்துரை வழங்கினார். மேலும், அவர் ஆராய்ச்சியா ளர்களுக்கும் விருது பெற்றவர்களுக்கும் பரிசு வழங்கினார். போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும், வெற்றி பெற்றவர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் நிறைவில் ஒருங்கிணைப்பாளர், உழவியல் துறைப் பேராசிரியை, எம் . ஜெய ராணி நன்றி கூறினார்.



விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் கார்மேகம், தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு. அலர்மேல் மங்கை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.கே.அருண் கபிலன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# புதுக்கோட்டையில் கிரிக்கெட் போட்டி வைரம்ஸ் பள்ளி சாதனை



புதுக்கோட்டை மாவட்ட மட்டைப் பந்து சங்கம் நடத்திய மட்டைப் பந்து விளையாட்டுப் போட்டியில் வைரம்ஸ் பள்ளி மாணவர்கள் முதலிடம் பெற்று எம்.ஆர்.முத்துப் பாண்டி நினைவுக் கோப்பையை வென்று ரூபாய் 20,000 பரிசுத்தொகையைப் பெற்றனர், இப்போட்டியில் ஆட்டத் தொடர் நாயகன் விருதை அஸ்வின், ஆட்ட நாயகன் விருதை விஜய் பாலாஜி மற்றும் சிறந்த பந்து வீச்சாளர் விருதை ராகுல் ஆகியோர் பெற்றனர். வெற்றிப்பெற்ற மாணவர்களை பள்ளியின் தலைவர் தேனாள் சுப்ரமணியன், நிர்வாக உறுப்பினர் சுப்பிரமணியன், பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி நாச்சம்மை, பள்ளியின் முதல்வர் சிராஜுதீன், மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# மதுரையில் இந்து சமய அறநிலையத் துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு பாஜகவினர் போராட்டம்

மதுரை, செப்.12-



அண்மையில் சென்னையில் நடைபெற்ற சனாதன தர்ம ஒழிப்பு மாநாட்டில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதன தர்மம் குறித்து பேசியது பல்வேறு சர்ச்சைகளை எழுப்பியது. இதனை கண்டிக்கும் வகையில் பாஜக, இந்து முன்னணி அமைப்பினர் என பல்வேறு அரசியல் கட்சியினர் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் மற்றும் சேகர் பாபு ஆகியோரை கண்டித்தும் உடனடியாக இருவரையும் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கம் செய்ய வேண்டும் என தமிழகம் முழுவதும் உள்ள இந்து சமய அறநிலையத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு பாஜக சார்பில் போராட்டம் நடத்தப்படும் என அதன் தலைவர் அண்ணாமலை அறிவித்திருந்தார். அதன்படி மதுரை எல்லீஸ் நகரில் உள்ள இந்து சமய அறநிலையத் துறை அலுவலகத்தை மதுரை மாநகர் பாஜக மாவட்டத் தலைவர் மகா சுசீந்திரன் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். ஏற்கனவே பாஜக போராட்டம் அறிவித்த நிலையில் அலுவலகத்துக்குள் நுழைந்து விடாமல் தடுப்பதற்காக போலீசார் தடுப்பு கட்டைகள் அமைத்து பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

அதைத் தொடர்ந்து தடையை மீறி முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்ட மதுரை மாநகர் பாஜக மாவட்டத் தலைவர் மகா சுசீந்திரன், தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் திருமாறன் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர். பாஜகவினர் நடத்திய இந்த போராட்டத்தினால் எல்லிஸ் நகர் பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசலும் பரபரப்பும் ஏற்பட்டது.



மதுரை கே.கே. நகரில் ராஜ்மஹால் சில்க் ஸ்டோரி பிரத்யோக ஷோரூம் புதிய கடையை கடையின் உரிமையாளர் ஆர். முருகானந்தம் தலைமையில், ஜெயலட்சுமி முன்னிலையில் இந்த கடை திறக்கப்பட்டது. இது மகளிருக்காண பிரத்தியேக ஷோரூம் ஆகும் மற்றும் நிறுவனத்தில் உள்ள அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### புதுக்கோட்டையில் மாஸ்டர்செஸ் அகாடமி நடத்திய

# மாவட்ட அளவிலான சதுரங்க போட்டி டெல்லி பப்ளிக் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது

புதுக்கோட்டை,செப்.12-



புதுக்கோட்டையில் மாஸ்டர்செஸ் அகாடமி நடத்திய மாவட்ட அளவிலான சதுரங்க போட்டி டெல்லி பப்ளிக் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது டெல்லி பப்ளிக் பள்ளியின் தாளாளர் எம். என்.நாகராஜன் தலைமை தாங்கினார், மாவட்ட சதுரங்க கழக செயலாளர் கணேசன் முன்னிலை வகித்தார் மாஸ்டர் செஸ் அகாடமி பார்த்திபன் அனைவரையும் வரவேற்றார், போட்டியில் ஏராளமான பள்ளி மாணவ மாணவியர் கலந்து கொண்டனர், 15 வயது 8 வயது 10 வயது 12 வயது என பல்வேறு பிரிவுகளாக நடத்தப்பட்டது.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கு மாலையில் பள்ளியின் வளாகத்தில் நடந்த நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா வெற்றி கோப்பையும் நற் சான்றும் வழங்கிபாராட்டினார் பரிசளிப்பு விழாவில்காரைக்குடி அப்போலோ ஹாஸ்பிடல் டாக்டர்எல்கோகுலகிருஷ்ணன் பள்ளியின் இயக்குனர் பார்கவி, மாஸ்டர் செஸ் அகாடமி வே .பார்த்திபன், சேதுராமன் , சபீபுல்லாமுகமது, முகமதுஇக்பால் புதுக்கோட்டை மாவட்ட சதுரங்க கழக செயலாளர் கணேசன் அடைக்கலவன் மற்றும் அங்கப்பன் பயிற்சியாளர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

### "எனது சகோதரர் சொன்ன உண்மைகளை

# சிபிசிஐடியிடம் தெரிவிப்பேன்" ஓட்டுநர் கனகராஜின் சகோதரர் தனபால்



சேலம்: "என் சகோதரர் கனகராஜ் என்னிடம் தெரிவித்த அனைத்து உண்மைகளையும் சிபிசிஐடி போலீஸாரிடம் தெரிவிக்க உள்ளேன்" என கோடநாடு கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஓட்டுநர் கனகராஜின் சகோதரர் தனபால் கூறியுள்ளார்.

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்ட கார் ஓட்டுநராக இருந்த கனகராஜின் சகோதரர் தனபால் வரும் செப்டம்பர் 14-ம் தேதி சிபிசிஐடி விசாரணைக்கு ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பான தகவல்களை சிபிசிஐடி விசாரணையில் தெரிவிப்பேன் என்றும், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோர் மீது கடும் குற்றச்சாட்டுகளை தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் சேலத்தில் செய்தியாளர்களிடம் தனபால் கூறியது: "எனக்கு மனநலம் பாதிக்கப்படவில்லை. நான் நன்றாக உள்ளேன். சேலம் புறநகர் மாவட்ட அதிமுக செயலாளர் இளங்கோவன், எனக்கு மனநலம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார். மனநலம் தொடர்பாக எங்கும் சிகிச்சை பெறவில்லை. உதகை நீதிமன்றத்தில் ஜாமீன் பெறும்போது மனநலம் பாதித்திருப்பதாக சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை. நூறு நாள்களுக்கு மேல் சிறையில் இருந்ததால் ஜாமீன் கிடைத்தது. கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக வரும் செப்.14-ம் தேதி சிபிசிஐடி. போலீஸார் முன் ஆஜராவதைத் தடுக்க அதிமுக பொதுச் செயலாளரும், புறநகர் மாவட்ட செயலாளரும் முயற்சிக்கின்றனர்.

நான் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன் என யாருடைய தூண்டுதலின் பேரிலும் செயல்படவில்லை. என்னைப் பொறுத்தவரை முதல்வராக இருந்த ஜெயலலிதாவின் கொடநாடு பங்களாவில் கொலை மற்றும் கொள்ளை சம்பவம் நடந்துள்ளது. அதில் தொடர்புடையவர்களை வெளிக்கொண்டு வரவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். என் சகோதரர் கனகராஜின் நோக்கமும் அதுதான். அவர் உயிரோடு இருந்தபோது, என்னை ஜெயலலிதாவின் ஆத்மா மன்னிக்காது. நான் தவறு செய்து விட்டேன் என என்னிடம் கனகராஜ் வருத்தப்பட்டார் .

ஏற்கெனவே கொலை, கொள்ளை அரங்கேறிய சமயத்தில் எனக்கு சேலம் புறநகர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து மேற்கு மாவட்டத்தின் அதிமுக செயலாளர் பதவியும், சங்ககிரி சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக சார்பில் நிற்க வைத்து அதன் பிறகு அமைச்சர் பதவியும் தருவதாக தெரிவித்திருந்தனர். ஆனால் அதை அப்போது நான் ஏற்கவில்லை. என் சகோதரர் என்னிடம் தெரிவித்த அனைத்து உண்மைகளையும் சிபிசிஐடி போலீஸாரிடம் தெரிவிக்க உள்ளேன். தேவையெனில் சிபிசிஐடி போலீஸார் உண்மை கண்டறியும் சோதனை மூலம் என்னை சோதித்துக் கொள்ளலாம். அதற்கு நான் தயாராக உள்ளேன்" என்று அவர் கூறினார்.

# தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பாக தியாகி இமானுவேல் சேகரன் 66-வது நினைவு தின அனுசரிப்பு

தென்காசி , செப்.12-



தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பாக தென்காசி மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள தியாகி இமானுவேல் சேகரன் 66-வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் வே.ஜெயபாலன் மாலை அணிவித்து மரியாதைசெலுத்தினார்.

உடன் மாவட்டப் பொருளாளர் ஷெரிப், தென்காசி மாவட்ட மருத்துவர் அணி தலைவர் மருத்துவர்மாரிமுத்து, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்கள் மருத்துவர் அன்பரசன், தமிழரசன், மாவட்டத் துணைச் செயலாளர் கென்னடி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சேக் தாவுது, ஜேசுராஜன், ஒன்றிய செயலாளர்கள் ரவிசங்கர், அழகு சுந்தரம், சீனி துரை, தென்காசி நகர செயலாளர் சாதிர், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேஸ்வரன், சாமிதுரை, இளைஞர் அணி தெற்கு மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜ், இசக்கி பாண்டியன் பரமசிவன், தங்கராஜ் பாண்டியன், ஜே.கே. ரமேஷ், முத்துராமலிங்கம், சங்கரநாராயணன், நசீம், ஆயிரப்பேரி முத்துவேல், பொன் செல்வன், கோ.மாறன், சரவணன், கருப்பண்ணன்,வேலுச்சாமி,சந்திரசேகர், ஒன்றிய கவுன்சிலர் மல்லிகா, ஷேக், பரித் ராமராஜ், மாரிமுத்து, ஜபருல்லாகான், பாப்பா, கலாநிதி, காசி, கிருஷ்ணன், கொடி கோபாலகிருஷ்ணன், தேன் பொத்தை திமுக கிளைச் செயலாளர் முருகேசன், சிவந்தி நகர் கிளைச் செயலாளர் ஐயப்பன், கடையநல்லூர் திமுக நகர செயலாளர் எஸ். அப்பாஸ், கணேசன்மற்றும் திமுக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# பாரதியார் நினைவு நாளில் மலரஞ்சலி செலுத்திய புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா பள்ளி மழலையர்கள்

புதுக்கோட்டை, செப்.12-




புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மழலையர் மாணவர்கள் மகாகவி பாரதியார் நினைவு நாளை முன்னிட்டு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்தனர். மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வர் இனி பாரதியார் நினைவுநாள் மகாகவி நாள்" என்று கடைப்பிடிக்கப்படும் என அறிவிப்பு செய்திருக்கின்ற இத்தருணத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மழலையர்கள் பாரதியாரின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர்.

பாப்பாவுக்கு பாட்டுச் சொன்ன பாரதி "பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயங்கொள்ளலாகாது பாப்பா மோதி மிதித்துவிடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா" என்று சின்னஞ்சிறார்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கண்டு பயந்து நடுங்காமல் தைரியத்தோடு எதிர்கொள்ளும் வகையில் பாடல்கள் புனைந்த பாரதியை அவரது நூற்றாண்டு நினைவு நாளில் மழலைக் குழந்தைகள் மலர்தூவி வணங்குவது சாலப் பொருத்தமாக அமைந்திருந்தது.

நிகழ்வில் ஏராளமான மாணவர்களும் ஆசிரியப்பெருமக்களும் கலந்துகொண்டு பாரதியின் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்தனர்

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

பட்டா வழங்கிய இடத்தை அளவீடு செய்ய கோரி

# வெள்ளியூர் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு விளாப்பாக்கம் ஊராட்சி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்



ஊத்துக்கோட்டை, செப்12–

திருவள்ளூர் மாவட்டம், விளாப்பாக்கம் ஊராட்சியில் வசித்து வரும் 21 வேட்டைக்கார இனமக்களுக்கு குடிமனை பட்டா வழங்கியுள்ளனர். ஆனால்,2 ஆண்டுகள் ஆகியும் அதற்கான இடத்தை வருவாய்த்துறை அதிகாரிகள் அளவீடு செய்து வழங்காமல் உள்ளனர்.வெள்ளியூர், விளாப்பாக்கம் ஊராட்சியில் கடந்த 25 ஆண்டுகளாக வசித்து வரும் 42 வேட்டைக்கார இனமக்களுக்கு குடிமனை பட்டா வருவாய் துறை அதிகாரிகள் வழங்காமல் மின் இணைப்பு பெற இயலாமல் அவதிக்கு உள்ளாகின்றனர் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வெள்ளியூர் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு காத்திருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவள்ளூர் மாவட்ட தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம், தமிழ்நாடு வேட்டைக்கார இன பழங்குடி மக்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் நடைபெற்றது. இந்தப்போராட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் தமிழரசு தலைமை தாங்கினார்.மாநில செயலாளர் கெங்காதுரை, மாநிலத்துணைத்தலைவர் சண்முகம்,விவசாயிகள் சங்கமாவட்ட செயலாளர் ஜி.சம்பத், சிபிஐஎம் வட்டச்செயலாளர் ஏ.ஜி கண்ணன்,டி.டில்லி,எஸ். கலையரசன்,கே. முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பட்டா கிடைக்கும் வரை இங்கேயே சமைத்து, இங்கேயே உண்டு, இங்கேயே உறங்குவோம் என கண்டன உரை ஆற்றினர். சம்பவ இடத்துக்கு திருவள்ளூர் தாசில்தார் சுரேஷ்குமார் விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

மேலும், வெள்ளியூர், விளாப்பாக்கம் ஊராட்சியில் வசித்து வரும்வேட்டைக்கார இன மக்களுக்கு மின்இணைப்பு வசதியை ஏற்படுத்தி தர கலெக்டரின் ஒப்புதலுடன் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார். மேலும், மந்தைவெளி புறம்போக்கு இடம் என்பதால் உயர் அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார். இந்நிகழ்ச்சியின் போது, வருவாய் ஆய்வாளர்கள் தினேஷ், பொன்மலர், கிராம நிர்வாக அதிகாரி ராதிகா உள்ளிட்டோர் உடன் இருந்தனர். வருவாய்த்துறை அதிகாரிகளின் உறுதி மொழியை ஏற்று அனைவரும் போராட்டத்தை விளக்கிக் கொண்டு அமைதியாக கலைந்து சென்றனர். இப்பிரச்சினையால் நேற்று காலை சுமார் மூன்று மணி நேரம் இப்பகுதியில் பதட்டமும், பரபரப்பும் நிலவியது.



▶ தருமபுரி கலெக்டர் சாந்தி ஒகேனக்கலில் கட்டப்பட்டு வரும் மலைவாழ் மக்கள் குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



▶ கரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் பிரபுசங்கர் தலைமையில் பொது விநியோகத்திட்டம் தொடர்பான ஆய்வு கூட்டம் நடைபெற்றது

சென்னை மணலி அரசு தொடக்கப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் கட்ட

# வட சென்னை நாடளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி அடிக்கல் நாட்டினார்

சென்னை , செப்12–

சென்னைமணலி அரசு தொடக்கப் பள்ளிக்கு 1.90 கோடி செலவில் புதிய வகுப்பறைகள் கட்ட வட சென்னை நாடளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அடிக்கல் நாட்டினார்.



வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி தொடர் முயற்சியால் எண்ணூர் காமராஜர் துறைமுக நிறுவனத்திடமிருந்து சமூக பாதுகாப்பு நிதியாக (CSR FUND) ரூபாய் 62.7 லட்சம் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சியிடம் நமக்கு நாமே திட்டம் மூலமாக ரூபாய் 1.27 கோடி, மொத்தம் ரூபாய் 1.90 கோடி பெற்று மணலி பாடசாலை தெருவில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளிக்கு6வகுப்பறைகள், கழிவறைகள் மற்றும் படிக்கட்டுகள் கட்டுமான பணிக்கான வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு மண்டல துணை ஆணையர் சிவகுரு பிரபாகரன், மணலி மண்டல குழு தலைவர் ஏ வி ஆறுமுகம் ஆகியோர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர்

# காரைக்கால் மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் பயனடையும் வகையில் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்

காரைக்கால், செப்12–

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ஏற்பாட்டின் பேரில் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் பயனடையும் வகையில் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் கடந்த 6 ஆம் தேதி தொடங்கியது. காரைக்கால் அடுத்த நேருநகரில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தொடங்கிய இம்முகாம் மாவட்டத்தில் உள்ள அணைத்து பள்ளி மற்றும்



கல்லூரிகளில் தொடர்ந்து நடைபெறுகிறது.

ஐபிஎம் திறன் மேம்பாட்டு திட்டத்தின் படி சி.எஸ்.ஆர். பாக்ஸ் மூலமாக அனுபவம் வாய்ந்த வல்லுநர்கள் குழு கொண்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கு வழிகாட்டுதல் மற்றும் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளுதல் ஆகிய பயிற்சிகள் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக நேற்றும் இன்றும் அன்னைதெரசா அரசு பெண்கள் பள்ளியில் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடைபெற்றது.

இம்முகாமை மாவட்ட ஆட்சியர் குலோதுனங்கன் திடீர் ஆய்வு மேற்கொண்டார், மேலும் இது போன்ற நிகழ்ச்சிகளில் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு தங்கள் வேலை வாய்ப்புக்கான திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான அமைச்சகத்தின் மகாத்மா காந்தி தேசிய உறுப்பினர் நிருபமா, பேராசிரியர் டாக்டர் சம்பந்தன், சி.எஸ். ஆர். திட்ட மூத்த ஒருங்கிணைப்பாளர் ஜோயா கான் மற்றும் பள்ளியின் துணை முதல்வர் ராஜசேகரன் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

வரலாறு நாளிதழ்
நிறுவனத்தில் பணிபுரிய
ஆட்கள் தேவை
காலிப் பணிஇடங்கள் 2
PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN
தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள்
சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.
நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்
தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட
செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்
மேலும் தொடர்புக்கு :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534

# ஒரு கோடி கேட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது இபிஎஸ் மான நஷ்ட வழக்கு





# மாடு முட்டி இறந்த புதுக்கோட்டை காவலருக்கு 70 லட்சம் நிவாரணம்

# கலைஞர் மகளிர் உரிமைத்தொகை விண்ணப்பித்த 57 லட்சம் பேருக்கு ஏமாற்றம்




சென்னை / புதுக்கோட்டை | 12.09.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

புதுமை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பெரோஸ் காந்தி , இந்திய அரசியல்வாதி, பத்திரிகையாளர் (பி.1912) (இ.1960)



வடிவேலு, , இந்திய தமிழ் நகைச்சுவை நடிகர் (பி.1960)



மாவை வரோதயன் , ஈழத்து எழுத்தாளர் (பி.1925) (இ.2009)



கப்டன் மொறிஸ் , விடுதலைப் புலிகளின் போராளி (பி.1969) (இ.1989)



## இன்றைய நினைவு நாள்

இளங்கீரன் , ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர் (பி.1927) (இ.1997)



பி. டி. சாமி , தமிழக எழுத்தாளர், திரைக்கதையாசிரியர் (பி.1930) (இ.2004)



ஆர். கே. சண்முகம் , தமிழக எழுத்தாளர் (பி.1930) (இ.2017)

